**இளங்கலை மாணவர்களுக்கான நிகழ்நிலை தேர்வு வழிகாட்டுதல்கள்**

**கலைப் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்**

**2020/2021**

நாட்டில் நிலவும் சூழ்நிலையின் காரணமாக, கல்விசார் செயல்முறைத் திட்டங்களின் (விசேட ஏற்பாடு) 2020 ஆம் ஆண்டின் 19 ஆம் துணைவிதியின் படி, கலைப் பீடம் தனது முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு இளங்கலை மாணவர்களுக்கான தேர்வுகளை நிகழ்நிலை தளங்கள் மூலம் நடாத்தும்.

**தேர்வுக்கு முன் செய்யவேண்டியவவை**

1. 1வது மற்றும் 2வது ஆண்டு 2வது அரையாண்டுத் தேர்வுகள் 2020/2021 நிகழ்நிலையில் நடைபெறும்.
2. மாணவர்கள் தங்கள் அனுமதி அட்டையை SIS கணக்கிலிருந்து பதிவிறக்கம் செய்து, அதை மென்நகலாகவும் மற்றும் கடின நகலாகவும் சேமித்து வைத்திருக்க வேண்டும்.
3. தேர்வு கால அட்டவணை IDC ஆல் பகிரப்படும்.
4. மாணவர்கள் வினாக்களுக்கு பதிலளிக்க 2 மணித்தியாலங்களும், விடைத்தாள்களை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய மேலதிகமாக இன்னும் இரு மணித்தியாலங்களும் வழங்கப்படுகிறது. மாணவர்களுக்கு விடைத்தாள்களை LMS க்கு பதிவேற்றுவது சிக்கலாக இருக்கும் பட்சத்தில், கூடுதலாக கொடுக்கப்பட்டுள்ள 2 மணித்தியாலங்களுக்குள் அவர்கள் தங்களுடைய விடைத்தாளை
    - 1ம் ஆண்டு – exam1@arts.cmb.ac.lk
    - 2ம் ஆண்டு – exam2@arts.cmb.ac.lk

    என்ற மின்னஞ்சல் முகவரிகளுக்கு மின்னஞ்சல் செய்ய எதிர்பார்க்கப்படுகிறார்கள்.
5. 1ம் மற்றும் 2ம் ஆண்டு மாணவர்களுக்கு, ஒரு நாளைக்கு இரு அமர்வுகளாக (காலை மற்றும் மாலை அமர்வுகள்) தேர்வுகள் நடாத்தப்படும்.
    - காலை அமர்வு: 6.00 மு.ப. தொடக்கம் 10.00 மு.ப. வரை
    - பிற்பகல் அமர்வு: 2.00 பி.ப. தொடக்கம் 6.00 பி.ப. வரை
6. காலைத் தேர்வுகளுக்கான வினாத்தாள்களை காலை 5.45 மணியிலிருந்தும் பிற்பகல் தேர்வுகளுக்கான வினாத்தாள்களை பிற்பகல் 1.45 மணியிலிருந்தும் LMS இலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.
7. தேர்வுகளின் ஏற்பாடு தொடர்பான ஏதேனும் விசாரணைகள் துறை/பகுதி தலைவருக்கு எழுத்துமூலமாக அனுப்பப்பட வேண்டும்.

**தேர்வுகளின் போது**

1. மாணவர்கள் தேர்வுக்கு அமரும் ஒவ்வொரு முறையும் தேர்வு தொடங்குவதற்கு 30 நிமிடங்களுக்கு முன் தங்களது அனுமதி அட்டையின் நகலை (PDF வடிவமாக) பதிவேற்றம் செய்ய வேண்டும். பதிவேற்றப்பட்ட அனுமதி அட்டையானது, சம்பந்தப்பட்ட பாடப்பிரிவு

அலகுடன் தொடர்புடைய ஒவ்வொரு கூண்டிலும் பரீட்சாத்தியின் கையொப்பம் தெளிவாகக் காட்டப்படவேண்டும்.

2. மாணவர்கள் தங்கள் LMS இல் உள்நுழைந்து, தேர்வு கால அட்டவணையின்படி தொடர்புடைய பாடப் பக்கத்தை அணுகி வினாத்தாளைப் பதிவிறக்கம் செய்ய வேண்டும்.

3. வினாத்தாள் பதிவிறக்கம் செய்யக் கிடைக்கவில்லை என்றால், தயவுசெய்து துணைப் பதிவாளர/கலை பீடத்தை drmedfac@med.cmb.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளவும் அல்லது 0714418483 என்ற எண்ணில் அழைக்கவும்.

4. வினாத்தாள் தொடர்பாக விண்ணப்பதாரருக்கு ஏதேனும் தெளிவுகள் தேவைப்பட்டால், தேர்வுக் காலத்தில் மேற்பார்வையாளராக கடமையாற்றும் அல்லது பாடத்திற்கு பொறுப்பான விரிவுரையாளரைத் தொடர்பு கொள்ளுமாறு மாணவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

5. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி சரியான நேரத்தில் மதிப்பீடுகளை முடிப்பதற்கு மாணவர்கள் பொறுப்பாவார்கள்.

6. அனைத்து விடைத்தாள்களும் கையால் எழுதப்பட்டதாக இருக்க வேண்டும். உங்கள் பதில்களை A4 அளவு தாளில் எழுதவும் (கோடிட்ட தாள்). எழுதுவதற்கு கருப்பு பால் பாயின்ட் பேனாவைப் பயன்படுத்தவும். உங்கள் கையெழுத்து தெளிவாக இருப்பதை உறுதி செய்து கொள்ளவும்.

7. விடைத்தாளின் ஒவ்வொரு பக்கத்தின் மேல் வலது புறத்தில் உங்கள் குறியீட்டு எண்ணை எழுதவும். விடைத்தாளில் உங்கள் பெயரை எங்கும் எழுத வேண்டாம்.

8. பக்கத்தின் கீழே உள்ள பின்வரும் வடிவமைப்பைப் பயன்படுத்தி விடைத்தாள்களின் பக்கங்களை எண்ணுங்கள்: உ+ம்: இது 5 பக்கங்களைக் கொண்டிருந்தால் - 1/5, 2/5... போன்றவை.

9. உங்கள் விடைத்தாளின் முதல் பக்கமாக (இணைப்பு I) பொதுவான முன் பக்கத்தை (LMS இல் வழங்கப்பட்டிருக்கும்) பயன்படுத்தவும். உங்கள் விடைத்தாளின் முதல் பக்கமாக இருக்க வேண்டிய முதல் பக்கத்தை நீங்கள் அச்சிடலாம் அல்லது கையால் எழுதலாம் என்பதை நினைவில் கொள்ளவும்.
10. விடைத்தாளின் முதல் பக்கத்தில் மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட வேண்டும்.

**11. பதிவேற்றுவதற்கான வழிகாட்டுதல்கள்**

a. விடைத்தாள்களை ஸ்கேன் செய்து அல்லது புகைப்படம் எடுத்து பக்க எண்களின் வரிசையில் ஒற்றை PDF கோப்பாக மாற்றவும்.
b. ஸ்கேன் செய்யப்பட்ட படத்தில் முழுப் பக்கமும் சரியாக அடங்கியிருப்பதை உறுதிசெய்து, அதை தெளிவாக/படிக்கக்கூடியதாக மாற்றவும்.
c. LMS தனிப்பட்ட பக்கங்களை தனித்தனியாக பதிவேற்ற அனுமதிக்காது என்பதை நினைவில் கொள்ளவும்.
d. ஏற்றுக்கொள்ளக்கூடிய கோப்பு வடிவம் PDF மட்டுமே என்பதை நினைவில் கொள்ளவும்.
e. PDF கோப்பில் பரீட்சாத்தியின் சுட்எண்ணுடன் குறிப்பிடப்பட வேண்டும், எ.கா. A 12345
f. உங்கள் விடைத்தாளை JPEG/JPG அல்லது வேறு ஏதேனும் படிவமாக பதிவேற்ற அனுமதிக்கப்பட மாட்டீர்கள்.
g. விடைத்தாளை சமர்ப்பித்த பிறகு, ஒப்புகையாகச் 'submitted' என்ற வார்த்தையோடுகூட LMS இன் முழுப் பக்கத்தின் ஸ்க்ரீன் ஷாட்டையும், மாணவர்கள் எடுத்துவைத்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.
h. நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குப் பிறகு சமர்ப்பிக்கப்பட்ட எந்த விடைத்தாளும் மதிப்பீட்டிற்கு ஏற்றுக்கொள்ளப்படாது என்பதை நினைவில் கொள்ளவும்.

i. உங்கள் தேர்வின் கடைசித் தினமன்று, கையொப்பமிடப்பட்ட அனுமதி அட்டையின் ஸ்கேன் செய்யப்பட்ட நகலை உங்கள் சேர்க்கை ஆண்டுடன் தொடர்புடைய இணைப்பு மூலம் LMS இல் பதிவேற்ற வேண்டும்.

**சரிசெய்தல்**

1. எதிர்பாராத தொழில்நுட்ப அல்லது இணைய இணைப்பு சிக்கல்கள் ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் தீர்க்கப்படும் முகமாக மாணவர்கள் தங்கள் நேரத்தை நியாயமான முறையில் நிர்வகிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

2. பரீட்சை காலத்தில் தொழில்நுட்பச் சிக்கல்கள் ஏற்பட்டால் (பதிவிறக்குதல் அல்லது பதிவேற்றுதல்) விண்ணப்பதாரர்கள் உடனடியாக LMS நிர்வாகி திரு. தக்ஷின திசாநாயக்கவை lmsadmin@arts.cmb.ac.lk அல்லது 0773797909 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்க வேண்டும்.
3. LMSக்கு விடைத்தாள் பதிவேற்றுவதில் எதிர்பாராத தொழில்நுட்பச் சிக்கல் இருந்தால், ஒரு விண்ணப்பதாரர் தங்கள் விடைத்தாள்களை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.
   - 1ம் ஆண்டு – exam1@arts.cmb.ac.lk
   - 2ம் ஆண்டு – exam2@arts.cmb.ac.lk
4. அத்தகைய மின்னஞ்சல் சமர்ப்பிப்புகளின் மின்னஞ்சல் தலைப்பு வரியில் விண்ணப்பதாரரின் பாடநெறி குறியீடு மற்றும் சுட்டெண் என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக் ECN2123 A36789

**தேர்வுகளின்போதான தவறான நடத்தை**

1. தேர்வு முறைகேடுகள் தொடர்பான அனைத்து விதிகளும் நிகழ்நிலை தேர்வுகளின் போது பொருந்தும். விண்ணப்பதாரர்கள் குறிப்பாக பின்வரும் விதிகள் பற்றி நினைவூட்டப்படுகிறார்கள்:

- சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விடைத்தாள்களும் மாணவர்களின் அசல் படைப்பாக இருக்க வேண்டும். குறிப்பிடப்படும் எந்த ஆதாரமும் சரியாக ஒப்புக் கொள்ளப்பட வேண்டும்.
- உங்கள் பதிலை எழுதுவதற்காக உதவி பெறுவதையோ அல்லது மற்றொரு பரீட்சாத்திக்கு உதவி வழங்குவதையோ தவிர்க்கவும்.
- பதில்களின் ஸ்கிரீன் ஷாட்களை எடுப்பதையோ, வேறு எந்த நபருடனும் அவற்றைப் பரிமாறிக்கொள்வதையோ, கேள்விகள் மற்றும் அல்லது பிற ஊடகங்கள் மூலமாக பதில்களை நகலெடுத்து ஒட்டுவதையோ தவிர்க்கவும்.
- நிர்ணயிக்கப்பட்ட பரீட்சை நேரத்தில் பரீட்சைப் பாடம் தொடர்பான விடயங்களை தெளிவுபடுத்துவதற்கான எந்தவொரு கோரிக்கையையும் இடுகையிடுவதையும் தவிர்க்கவும்.

ஏதேனும் பரீட்சை முறைகேட்டில் ஈடுபட்டதாகக் கண்டறியப்பட்டால் எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நினைவில் கொள்ளவும்.

**இணைப்பு I**

**மாணவர்களுக்கான பிரகடனப் படிவம்**

**கலைப் பிரிவில் முதலாம்/இரண்டாம் ஆண்டு தேர்வு - இறுதித் தேர்வு – அரையாண்டு 2 2020/2021**

**கலைப் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்**

**பாடத்தின் தலைப்பு -**

**பாடநெறி குறியீடு –**

**சுட்எண் -**

| வினா இலக்கம் | பக்க எண் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |

விடைத்தாளில் உள்ள மொத்த பக்கங்களின் எண்ணிக்கை -

சமர்ப்பித்த திகதி -

தகுந்த முறையில் (குறிப்பாக) ஒப்புகைசெய்யப்பட்டதைத் தவிர, இந்த மதிப்பீடு எனது சொந்தப் படைப்பு என்று நான் அறிவிக்கிறேன். வேறொருவரின் படைப்பை என்னுடையதாகச் சமர்ப்பிப்பது தேர்வுக் குற்றமாகக் கருதப்படும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

...........................................................

கையொப்பம்